10th March 1964]

* 204 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have received recently any memorandum from the weavers of Salem district regarding their difficulties in their being asked to pay a monthly instalment of Rs. 20 instead of Rs. 10 for the houses constructed for them; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) Does not arise.

குறுகிய கால நஞ்சைப்பயிர் விதைகள்

* 205 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி ஜில்லாவில் விவசாய இலாகாவின் கையிருப்பில் போதுமான குறுகிய கால நஞ்சைப்பயிருக்குரிய வித்துக்கள் இல்லை என்பது உண்மையா ?

(இ) அப்படியானால், தேவையான வித்துக்கள் உடனே சப்ளை செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) உண்மை அல்ல. கிராம சகாயக்களுக்கு வழங்குவதற்காக கிராம உற்பத்தித் திட்டங்களின் கீழ் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் குறியளவுகளுக்கேற்ப குறுகிய கால நெற்பயிர் விதைகள் போதிய அளவுக்கு விவசாயத் துறையினரிடம் உள்ளன.

(இ) ரயத்துக்களுக்கு வழங்குவதற்கு வேண்டியிருக்கும் மறு உற்பத்தி (Secondary) விதைகளை உற்பத்தி செய்து தருவதற்காக ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் பஞ்சாயத்துக்கள் தேர்ந்தெடுக்கும் கிராம சகாயக்களுக்கு மட்டுமே முதல் உற்பத்தி Primary) விதைகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய கிராம சகாயக்களுக்கு முதல் உற்பத்தி விதைகளை வழங்குவதில் கஷ்டம் எதுவும் ஏற்படவில்லை.

(அ) No. There is enough stock of primary seeds of short-term paddy with the Agricultural Department with reference to the targets fixed under the Village Production Plans for supply to gramasahayaks.

(இ) The primary seeds are meant for supply only to gramasahayaks selected by the respective panchayats in each panchayat union for producing secondary seeds required for distribution to ryots and there is no difficulty in supplying primary seeds to such gramasahayaks.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், குறுகிய கால நெற்பயிருக்கு அந்த ஜில்லாவிற்குத் தேவையான விதைகளின் அளவு என்ன என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

[10th March 1964

புலவர் கா. கோவிந்தன் : டி. கே. என். 6 என்ற ஒட்டுக் கிச்சிலி விதை இந்த ஆண்டு வட ஆற்காடு மாவட்டத்திற்கு போதிய அளவுக்குக் கொடுக்கப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அந்த விதமான தட்டுப்பாடு இல்லாமல் அடுத்த ஆண்டுக்காவது வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இது திருநெல்வேலி ஜில்லா சம்பந்தப்பட்ட கேள்வி. அதைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

MR. SPEAKER : The hon. Member, Pulavar Govindan, is always putting supplementary questions which do not arise from the main question and complaining that the Hon. Ministers are not answering the questions properly. The Hon. Ministers concerned should say immediately that the supplementary question does not arise from the main question and should not hesitate to say so.

மதுரையில் விவசாயக் கல்லூரி

* 206 *கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி :* கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையில் விவசாயக் கல்லூரி அமைப்பதற்கான திட்டம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆமென்றால், எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) From July 1965, if possible.

திரு. வி. எஸ். எஸ். மணி : சார், மதுரையில் விவசாயக் கல்லூரி
9-00 a.m. எந்த இடத்தில் அமைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது? அதன் விஸ்தீரணம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : விவசாயக் கல்லூரியை மதுரையை அடுத்துள்ள ஒத்தக்கடைப் பகுதியில் உள்ள வௌவால் தோட்டம் என்ற பகுதியில் அமைப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கு சர்க்கார் நிலம் 109 ஏக்கர் இருக்கிறது. ஏறக்குறைய 80 ஏக்கர் கல்லூரிக்காக எடுக்கப்படும். மேலும் 200 ஏக்கருக்கு மேல் விவசாய நிலத்தையும் 'அக்வையர்' செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Agricultural University

* 207 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government for starting an Agricultural University in this State; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) The details are being worked out.